தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2021

**9 வயதுப்பிரிவு**
(01.01.2012 – 31.12.2012 வரையில் பிறந்தோர்)

## நடுகல் நாயகர்கள்

போர்ப்பறை கேட்டு போர்க்களம் சென்று, பகைவருடன் போராடி உயிர்நீத்தோர் பெருவீரர். அவர்களுக்கு நடுகல் அமைத்து வழிபடுவது தமிழரின் தொன்மையான பண்பாட்டு மரபு. தமிழ் இலக்கியங்களில் பதிவாகி வரலாற்றுத் தொன்மங்களாய் நிமிர்ந்து நிற்கும் நடுகற்கள் அதற்குத் தக்க சாட்சி! அதன் தொடர்ச்சியாய், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வழிநடத்தி உலகம் வியக்கும் வகையில் உயர்த்தியவர் எங்கள் தலைவர் மாமா. அவரின் சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுத்தவர்கள் மாவீரர்கள்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில், மாவிலாற்றிலிருந்து முள்ளிவாய்க்கால் வரை வீரகாவியம் படைத்த மாவீரர்கள் பலருக்கு நடுகல் அமைத்து வழிபட முடியாத பெருந்துயரை எதிர்கொண்டது தமிழினம். அவர்கள் அத்தனைபேரையும் நெஞ்சிருத்தி, அன்னவரைச் சிறப்பித்து நினைவேந்தும் வண்ணம் நடுகல் நாயகர்களாகக் கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் மே திங்களில் வணங்கிப் போற்றுகின்றோம்.

பகைவரின் திட்டமிட்ட தமிழின அழிப்புப் போரைத் தடுத்து நிறுத்துகின்ற அணைகளாய் உயிர்வேலி அமைத்து நின்ற உத்தமர்கள் அவர்கள். தமிழீழப் போராட்டத்தை பல்திறன் கொண்ட விடுதலைப் போராட்டமாக உயர்த்திய வீரத்தளபதிகளும் வீரர்களும் நடுகல் நாயகர் எனும் பெருமதிப்போடு தமிழர் மனங்களில் நிலைத்திருக்கின்றனர்.

காலம் இவ்வாறே கடந்து விடாது. எம் இனத்தின் பெருவலி நீங்கும். தமிழீழம் எமதாகும். அழிக்கப்பட்ட நடுகற்கள் மட்டுமல்ல, நடுகல் நாயகர்களுக்கான நடுகற்களும் தமிழர் வீரத்தைப் பறைசாற்றி நிமிரும். புலத்தமிழர் நாமும் அங்கே தலைசாய்த்து வணங்கி நிற்போம்.

நன்றி,

வணக்கம்.